## றோயல் கல்லூரி –கொழும்பு 07
## Royal College – Colombo 07

**மூன்றாந் தவணைப் பரீட்சை – 2022 (2023)**
**3rd Term Examination – 2022 (2023)**

| 60 | T | I |
|---|---|---|

| | | |
|---|---|---|
| **வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் I**<br>Business & Accounting Studies I | தரம் 11<br>Grade 11 | **நேரம் 1 மணி**<br>Time 1 Hours |

**குறிப்பு**

- **எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.**
- **ஒவ்வொரு வினாவிற்கும் தரப்பட்டுள்ள (1),(2),(3),(4) ஆகிய விடைகளுள் மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.**
- **வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் உமது தெரிவுக்குரிய இலக்கத்திற்கு ( X ) என்றவாறு புள்ளடி இடுக.**

**பகுதி - 1**

- **வினா இல 01 தொடக்கம் 05 வரை பின்வரும் தகவல்களினடிப்படையில் விடை தருக.**

தனுஷ்க சுற்றுலா பயணிகளுக்கு தேவையான சேவைகளை வழங்கும் நன்கு அறிந்த ‘‘வாசனா டிரெவல்ஸ்’’ வணிகத்தில் பத்து வருட காலமாக பணியாற்றினார். இவ் வேலையிலிருந்து இடை விலகிய பின்னர் ‘‘தனா டிராவல்ஸ்’’ எனும் பெயரில் தனியார் கம்பனியொன்றை ஆரம்பித்தார்.

அதிவேகப் பாதைகள் நிர்மாணிக்கப்பட்டமை மற்றும் பாதைகள் அகலமாக்கப்பட்டமை. இவ் வணிக நடவடிக்கைகளுக்கு உதவியாக இருந்ததுடன் அண்மைக் காலத்தில் ஏற்பட்ட எரிபொருள் தட்டுபாடு தடையாக இருந்தது.

சுற்றுலா காலங்களில் போக்குவரத்து முகவர்களிடமிருந்து இவரது வணிகத்திற்கு அதிக கேள்வி நிலவுவதாக தனுஷ்க கூறுகின்றார். இவர் நாட்டின் சுகாதார விதிமுறைகளுக்கமைவாக பயணங்களை ஒழுங்கமைக்கின்றார்.

1) ‘‘தனா டிராவல்ஸ்’’ வணிகத்தினால் பூர்த்தி செய்யப்படும் தேவை மற்றும் விருப்பம்,
   1. டிராவல்ஸ்- போக்குவரத்து
   2. போக்குவரத்து – சுகாதாரம்
   3. போக்குவரத்து - டிராவ்ல்ஸ்
   4. டிராவ்ல்ஸ்- சுகாதாரம்

2) ‘‘தனா டிராவல்ஸ்’’ வணிகத்தின் அக்கறையுடைய தரப்பினர்கள்
   1. அரசு , சுற்றுலா வழிகாட்டி
   2. ஊழியர்கள், சுற்றுலாப் பயணிகள்
   3. பயண முகவர், பொதுமக்கள்
   4. தனுஷ்க, சுற்றுலா வழிகாட்டி

3) ‘‘தனா டிரொவல்ஸ்’’ வணிகம் எவ்வகையான வணிக அமைப்பு,
   1. தனியுடமை
   2. பங்குடமை
   3. கூட்டிணைக்கப்பட்ட கம்பனி
   4. சங்கங்கள்

4) மேலே விடயங்களின் அடிப்படையில் பலம் மற்றும் வாய்ப்பு,
   1. அதிகவேகப்பாதை நிர்மாணம் - எரிபொருள் தட்டுப்பாடு
   2. பயண நிறுவனம் தொடர்பான அனுபவம் - சுற்றுலா வழிகாட்டிக்கான அதிக கேள்வி.
   3. சுற்றுலா வழிகாட்டிக்கான அதிககேள்வி – சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றல்.
   4. எரிபொருள் தட்டுப்பாடு- அதிவேகப் பாதைகள் நிர்மாணம்

5) சுற்றுலாவிற்காக பயன்படுத்தப்படும் பஸ்கள் உள்ளடங்கும் உற்பத்திக் காரணி,
   1. நிலம்
   2. உழைப்பு
   3. மூலதனம்
   4. முயற்சி



kalvi.lk

6) அகச் சூழல் காரணிகளை மட்டும் கொண்ட விடையை தெரிவு செய்க.
   1. வாடிக்கையாளர், வழங்குனர், போட்டியாளர்
   2. ஊழியர்கள், முகாமையாளர், வாடிக்கையாளர்
   3. உரிமையாளர், ஊழியர்கள், போட்டியாளர்.
   4. உரிமையாளர், முகாமையாளர், ஊழியர்கள்.

7) ''ரத்னா சகோதரர்கள்'' வணிகத்தில் உச்சகட்ட அங்கத்தவர் எண்ணிக்கையை வரையறுக்கும் சட்டம்.
   1. 1890ம் ஆண்டு பங்குடமை கட்டளைச் சட்டம்.
   2. 1840ம் ஆண்டு மோசடி தவிர்ப்புச் சட்டம்.
   3. 2007ம் ஆண்டு 07ம் இலக்க கம்பனி சட்டம்.
   4. 1972ம் ஆண்டு 05ம் இலக்க கூட்டுறவுச் சட்டம்.

8) நாமல் பெரேராவின் '' நாமல் வணிகம்'' வணிகத்தை கட்டாயமாக பதிவு செய்ய வேண்டுமென அவர் கூறுகின்றார். அதற்கான காரணமாக அமைவது,
   1. அரச சலுகைகளைப் பெற்றுக் கொள்வதற்காக
   2. கடன்களை இலகுவாகப் பெற்றுக்கொள்ளவதற்காக
   3. அவரது முழுப்பெயரில்லாதது வேறு பெயரில் வணிகம் இயங்குவதால்.
   4. வணிகத்தின் உரிமையை உறுதிப்படுத்துவதற்காக .

9) பொருத்தமான வணிக அமைப்பொன்றை தெரிவு செய்யும் போது கருத்திற் கொள்ளப்படாத காரணி,
   1. உரிமை அடிப்படை
   2. நோக்க அடிப்படை
   3. அளவு அடிப்படை
   4. முகாமைத்துவம் யாரால் மேற்கொள்ளப்படுகிறது என்ற அடிப்படை

10) X நிரலுடன் Y நிரலை மிகச்சரியாக தொடர்புபடுத்தும் போது,

| X | Y |
|---|---|
| 1. 'லக்கி உற்பத்திகள்'' வணிகத்திற்கு அலங்காரப் பொருட்கள் வாங்குதல். | A. இறக்குமதி வியாபாரம். |
| 2. தைத்த ஆடைகளை அமெரிக்காவிற்கு விற்பனை விற்பனை செய்தல். | B. மொத்த வியாபாரம் |
| 3. அம்மா பலசரக்கு கடையில் அரிசி | C. ஏற்றுமதி வியாபாரம் |
| 4. இலங்கை, இந்தியாவிடமிருந்து எரிபொருள் கொள்வனவு செய்தல். | D. சில்லறை வியாபாரம் |

1. B C A D    2. C B A D    3. B C D A    4. C B D A

11) நுகேகொட இலங்கை வங்கியில் நடைமுறைக் கணக்கைப் பேணும் இசுறு, மகேஷிடமிருந்து அவரது வணிகத்திற்கு தேவையான இருப்புக்களை கொள்வனவு செய்தார். மகேஷ் வேயங்கொட மக்கள் வங்கியில் நடைமுறைக் கணக்கைப் பேணுகிறார். இசுறு, மகேஷிற்கு காசோலை மூலம் கொடுப்பனவு செய்தார். இதில் கட்டளையிடுபவர், கட்டளையைப் பெறுபவர், கொடுணி ஆகியோரை முறையே காட்டும் விடையை தெரிவு செய்க
   1. மகேஷ் , மக்கள் வங்கி – வேயங்கொட, இசுறு
   2. இசுறு, இலங்கை வங்கி- நுகேகொட, மகேஷ்
   3. இசுறு, மக்கள் வங்கி – வேயங்கொட, மகேஷ்
   4. மகேஷ் , இலங்கை வங்கி- நுகேகொட,இசுறு



kalvi.lk

12) இழப்பீட்டு தத்துவம் தொடர்பாக மிகப் பொருத்தமானக் கூற்றைத் தெரிவு செய்க.

1. இழப்பீட்டு தத்துவமானது, காப்புறுதி செய்யக்கூடிய சட்ட ரீதியான உரிமையாகும்.
2. இழப்பீட்டு தத்துவமானது, சொத்துக் காப்புறுதி, ஆயுள் காப்புறுதி ஆகிய இரண்டிற்கும் பொருத்தமானது.
3. சொத்தொன்று சேதமாகும் போது மொத்த காப்புறுதி தொகை இழப்பீடாக வழங்கப்படும்.
4. இழப்பீட்டு தத்துவத்தின்படி , சொத்தொன்றின் சேதத்திற்கான தொகை மட்டும் வழங்கப்படும்.

13) பல்வேறு தொடர்பாடல் தன்மைகள் X நிரலிலும், அவற்றிற்கான தொடர்பாடல் முறைகள் Y நிரலிலும் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| 1. எழுத்து மூலம் | A. கூட்டங்கள், கலந்துரையாடல் |
| 2. வாய்மொழி மூலம் | B- தொலைக்காட்சி , இணையம் |
| 3. இலத்திரனியல் மூலம் | C- கடிதங்கள் , துண்டுப்பிரசுரங்கள் |
| 4. குறியீடு மற்றும் சமிக்ஞை மூலம் | D- மணி, வீதி சமிக்ஞை |

நிரல் X மற்றும் நிரல் Y யை மிகச் சரியாக தொடர்புபடுத்தும் போது பெறப்படும் விடை

1. A B C D 2. C A B D 3. C B A D 4. D B C A

14) பெரும்பாலான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் ''எல்ல ஒடிஸ்லி சுற்றுலாப் பயணிகள்'' என்ற <u>டீசல் புகையிரதத்தையே</u> அதிகம் பயன்படுத்துக்கின்றனர். இது <u>கொழும்பு - கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து கொழும்பு – பதுளை புகையிரதப் பாதை</u> வழியாக செல்கிறது.

கோடிடப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு போக்குவரத்து அடிப்படைகளை ஒழுங்கு முறையில் காட்டும் விடையை தெரிவு செய்க.

1. வழி, ஊடகம், சக்தி, தரிப்பிடம்
2. ஊடகம், சக்தி, தரிப்பிடம், வழி
3. சக்தி, ஊடகம், தரிப்பிடம், வழி
4. சக்தி, தரிப்பிடம், வழி, ஊடகம்

15) முகாமைத்துவத்தில் , எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைதல் ……1…… எனவும் , குறைந்த வளங்களிலிருந்து கூடிய வெளியீடுகளைப் பெற்றுக் கொள்ளல் ……2……. எனவும் அழைக்கப்படும்.

(1) , (2) ஆகிய இடைவெளிகளுக்குப் பொருத்தமான விடைகள் முறையே,

1. கட்டுப்படுத்தல், வினைத்திறன்
2. விளைதிறன், தலைமைத்துவம்.
3. வினைத்திறன், விளைதிறன்
4. விளைதிறன், வினைத்திறன்



kalvi.lk

16) தனியார் கம்பனி ஒன்றில் பணிபுரிந்த திரு. கமலஸ்ரீ தான் பெற்றுக் கொண்ட ஓய்வூதியப் பணமான, ஒரு மில்லியன் ரூபாவை மூலதன இலாபம் கிடைக்கும் வழிமுறையொன்றில் முதலிட எண்ணுகிறார்.
அதற்கான மிகப்பொருத்தமான முதலீட்டு வழிமுறையை தெரிவு செய்க.
1. கம்பனியயொன்றில் சாதாரணப் பங்குகளை கொள்வனவு செய்தல்.
2. திறைசேறி உண்டியல் கொள்வனவு செய்தல்
3. சேமிப்புக் கணக்கில் வைப்பிலிடல்.
4. நிலையான வைப்புக் கணக்கில் வைப்பிலிடல்.

17) வணிகமொன்றில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கலொன்று பின்வருமாறு,
- கடனடிப்படையில் ரூ 60000 பெறுமதியான இருப்பு கொள்வனவு

இக் கொடுக்கல் வாங்கலின் விளைவாக வணிகத்தின் கணக்கீட்டு சமன்பாட்டில்,
1. பொறுப்புக்கள் மட்டும் மாற்றமடையும்.
2. சொத்துக்கள் மட்டும் மாற்றமடையும்.
3. பெறுப்புக்கள் மற்றும் சொத்துக்கள் மட்டும் மாற்றமடையும்.
4. சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் உரிமை மாற்றமடையும்.

18) 2022.01.01 இல் ரூ 50 000 பெறுமதியான வங்கிக் கடனொன்றை பெற்றுக்கொண்டுள்ள ரமேஷ் தனது சொந்தப் பணத்திலிருந்து ரூ 5000 வங்கிக் கடன் வட்டியை செலுத்தினார் இக் கொடுக்கல் வாங்கலின் காரணமாக வணிகத்தின் கணக்கீட்டு சமன்பாடானது,
1. ரூ 5000 இனால் குறைவடையும்
2. ரூ 5000 இனால் அதிகரிக்கும்.
3. ரூ 10000 இனால் குறைவடையும்.
4. மாற்றமடையாது

19) அதிகரித்தல் செலவாகவும், குறைதல் வரவாகவும் காணப்படும் விடையை தெரிவு செய்க.
1. காசுக் கணக்கு, வங்கிக் கணக்கு
2. வங்கிக் கடன் கணக்கு, கடன் கொடுத்தோர் கணக்கு
3. வங்கிக் கடன் கணக்கு, காசுக் கணக்கு
4. கடன் கொடுத்தோர் கணக்கு, கொள்வனவுக் கணக்கு

20) ஜனகன் வணிகமானது ரூ 5000 பெறுமதியான 10 டொபி பைக்கற்றுக்களை கடனுக்கு விற்பனை செய்ததுடன் 10 % வியாபாரக் கழிவை வழங்கியது இக் கொடுக்கல் வாங்கலின் விளைவாக வணிகத்தின்,
1. பெற்றக் கழிவு ரூ 500 ஆல் அதிகரிக்கும்.
2. விற்பனை வருமானம் ரூ 5000 இனால் அதிகரிக்கும்
3. கடன்பட்டோர் தொகை ரூ 5000 இனால் அதிகரிக்கும்
4. கடன்பட்டோர் தொகை ரூ 4500 இனால் அதிகரிக்கும்.

21) குமுதுனி வணிகத்திற்கு ரூ. 50000 பெறுமதியான இருப்பு கொள்வனவு செய்தல் தொடர்பான இரட்டைப் பதிவு,

| | | | |
|---|---|---|---|
| 1. இருப்புக் கணக்கு | - | வரவு - | ரூ 50000 |
| காசுக் கணக்கு | - | செலவு - | ரூ 50000 |
| 2. கொள்வனவுக் கணக்கு | - | வரவு - | ரூ 50000 |
| காசுக் கணக்கு | - | செலவு - | ரூ 50000 |
| 3. இருப்புக் கணக்கு | - | வரவு - | ரூ 50000 |
| கடன் கொடுத்தோர் கணக்கு | - | செலவு - | ரூ 50000 |
| 4. கொள்வனவுக் கணக்கு | - | வரவு - | ரூ 50000 |
| கடன்கொடுத்தோர் கணக்கு | - | செலவு - | ரூ 50000 |



kalvi.lk

- தளபாடக் கடையொன்றில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

  A -“ மொரட்டுவ தளபாடங்கள்” வணிகத்திலிருந்து ரூ 8000 பெறுமதியான தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டது.

  B- காசுக்கு கொள்வனவு ரூ 70 000.

  C- தினபால கம்பனியிடமிருந்து ரூ 12000 பெறுமதியான தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டது.

22) கொள்வனவு நாளேட்டில் பதிவு செய்யப்படும் கொடுக்கல் வாங்கல் அல்லது கொடுக்கல் வாங்கல்கள்,

1. A மட்டும் 2. B மட்டும் 3. C மட்டும் 4. A மற்றும் C

23) நதீரா வணிகத்தின் 01.12.2022 இல் சில்லறைக் காசு மீதி ரூ 480 ஆகும். அதே தினத்தில் ரூ 4520 மீள் நிரப்பப்பட்டது.
சில்லறைக் காசு வசக்கட்டின் பெறுமதி,

1. ரூ 480 2. ரூ.4520 3. ரூ. 5000 4. ரூ 5480

24) அமலிடமிருந்து ரூ 20 000 பெறுமதியான காசோலை பெறப்பட்டது, இதற்கான இரட்டைப் பதிவு,

1. காசுக் கணக்கு - வரவு - ரூ 20 000
   அமல் கணக்கு - செலவு - ரூ 20 000
2. வங்கிக் கணக்கு - வரவு - ரூ 20 000
   அமல் கணக்கு - செலவு - ரூ 20 000
3. அமல் கணக்கு - வரவு - ரூ 20 000
   காசுக் கணக்கு - செலவு - ரூ 20 000
4. அமல் கணக்கு - வரவு - ரூ 20 000
   வங்கிக் கணக்கு - செலவு - ரூ 20 000

25) உரிமையாளரால் ரூ 80 000 பெறுமதியான சிறிய லொறியொன்று வணிகத்தில் ஈடுபடுத்தப்படல் தொடர்பான மூல ஆவணம் மற்றும் முதன்மை ஏடு,

1. பொது நாட்குறிப்பேடு மற்றும் நாட்குறிப்புக் கைச்சாத்து
2. காசேடு மற்றும் பற்றுச்சீட்டு
3. நாட்குறிப்புக் கைச்சாத்து மற்றும் பொது நாட்குறிப்பேடு
4. பற்றுச்சீட்டு மற்றும் காசேடு

- **பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி வினா இல 26 மற்றும் 27 ஆகியவற்றிற்கு விடையளிக்க.**

31/12/2022 இல் வங்கிக் கணக்கு மீதி ரூ 26800 ஆகும். பின்வரும் காரணங்களால் இம் மீதி வங்கிக் கூற்று மீதியுடன் வேறுபட்டுக் காணப்பட்டது.

A- வழங்கப்பட்ட ஆனால் இன்னும் சமர்ப்பிக்கப்படாத காசோலை ரூ 6000

B- நேரடி வைப்புக்கள் ரூ 3000

C – நிலையான கட்டளையின் பெயரிலான காப்புறுதி தவணைக் கட்டணம் ரூ 5800.

26) வங்கிக் கூற்று மீதியை விட வங்கிக் கணக்கு மீதி குறைவாகக் காணப்படுவதற்கான காரணமாக அமையக் கூடியது,

1. A மட்டும் 2. B மட்டும்
3. B மற்றும் C மட்டும் 4. A மற்றும் B மட்டும்



kalvi.lk

27) 31/12/2022 இல் சீராக்கிய வங்கி மீதி,

1. ரூ 20800　　2. ரூ 24000　　3. ரூ 29800　　4. ரூ 32800

- **பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி வினா இல 28 மற்றும் வினா இல 29 ஆகியவற்றிற்கு விடையளிக்க.**

வணிகமொன்றின் கணக்கேடுகளில், மின்கட்டணக் கொடுப்பனவு ரூ 5700 பதிவு செய்யப்பட்டுள்ள முறை கீழே காட்டப்பட்டுள்ளது ,

மின் கட்டணக் கணக்கு - வரவு ரூ. 7500
　　காசுக் கணக்கு - செலவு ரூ 7500

28) மேலே காட்டப்பட்டுள்ள பதிவினால்,

1. தொங்கற் கணக்கு வரவு மீதி ரூ 1800 ஆகக் காணப்படும்
2. மின்கட்டணம் தொடர்புடைய கணக்குகளில் ரூ 1800 ஆல் அதிகமாக பதிவு செய்யபட்டுள்ளது.
3. பரீட்சை மீதியின் வரவு மற்றும் செலவு நிரல்களின் கூட்டுத்தொகை சமமாக இல்லை.
4. மின்கட்டணம், கணக்குகளில் தவறான பக்கங்களில் ரூ 1800 ஆல் அதிகமாகவும் பதியப்பட்டுள்ளது.

29) மேலே காட்டப்பட்டுள்ள வழுவை திருத்துவதற்கான சரியான இரட்டைப் பதிவு,

1. காசுக் கணக்கு - வரவு - ரூ 1800
　　மின்கட்டணக் கணக்கு- செலவு - ரூ 1800

2. மின்கட்டணக் கணக்கு - வரவு - ரூ 1800
　　காசுக் கணக்கு - செலவு - ரூ 1800

3. மின்கட்டணக் கணக்கு - வரவு - ரூ 5700
　　காசுக் கணக்கு - செலவு - ரூ 5700

4. காசுக் கணக்கு - வரவு - ரூ 7500
　　மின் கட்டணக் கணக்கு - செலவு - ரூ 7500

30) 2022 இல் ''கோல்ட் ஸ்டார்'' விளையாட்டுக் கழக அங்கத்தவர்களின் எண்ணிக்கை 100 ஆகும். மாதாந்த அங்கத்துவக் கட்டணம் ரூ 50 ஆகும். 20 அங்கத்தவர்கள் தமது அங்கத்துவக் கட்டணத்தை செலுத்தவில்லை.

2022ம் ஆண்டிற்காக பெறுவனவுக் கொடுப்பனவுக் கணக்கு மற்றும் வருமான செலவுக் கணக்குகளில் பதிவு செய்ய வேண்டிய தொகைகள் முறையே,

1. ரூ 4000, ரூ 5000　　2. ரூ 5000, ரூ 4000
3. ரூ 60 000, ரூ 48000　　4. ரூ 48000, ரூ 60 000

- **பின்வரும் விடயங்களைப் பயன்படுத்தி வினா இல 31 மற்றும் 32 ஆகியவற்றிற்கு விடை தருக**

விக்ரமன் சீமெந்தாலான பூச்சாடிகளை உற்பத்தி செய்யும் வணிகத்தை ஆரம்பித்துள்ளார். 2022 ஜனவரி மாதத்திற்கான தகவல்கள் பின்வருமாறு,

| | |
|---|---|
| நேர்ப் பொருள் கிரயம் | ரூ 90 000 |
| ஏனைய நேர்க் கிரயம் | ரூ 30 000 |
| நேரில் கிரயம் | ரூ 60 000 |



kalvi.lk

ஜனவரி மாதத்தில் 1000 சீமெந்து பூச்சாடிகள் உற்பத்தி செய்யப்பட்டன. ஒரு பூச்சாடி உற்பத்திக்கான சம்பளமாக ரூ 40 வழங்கப்பட்டது.

31) மேலே தகவல்களின் படி முதன்மைக் கிரயம்,
1. ரூ 120 000 2. ரூ 160 000 3. ரூ 180 000 4. ரூ 220 000

32) ஒரு பூச்சாடிக்கான உற்பத்திக் கிரயம்,
1. ரூ 120 2. ரூ 160 3. ரூ 180 4. ரூ 220

33) ''திஸ்ஸ அரிசி வியாபாரிகள்'' வணிகத்தின் தகவல்கள் கீழே தரப்பட்டுள்ள.
வெளிச் சென்ற வண்டிக் கூலி
இறுதி இருப்பு
உள் வந்த வண்டிக் கூலி
ஆரம்ப இருப்பு
கொள்வனவு

விற்பனைக்கு தயாராக இருந்த பொருள் கிரயத்தினுள் அடங்கும் விடயங்களை மட்டும் கொண்ட விடையை தெரிவு செய்க.
1. ஆரம்ப இருப்பு + கொள்வனவு + வெளிச்சென்ற வண்டிக் கூலி
2. ஆரம்ப இருப்பு + கொள்வனவு + விற்பனை
3. ஆரம்ப இருப்பு + இறுதி இருப்பு + கொள்வனவு
4. ஆரம்ப இருப்பு + கொள்வனவு + உள்வந்த வண்டிக் கூலி

34) சந்தமாலி வணிகத்தின் 2022ம் ஆண்டிற்கான மொத்த விற்பனை ரூ 200,000 ஆகும். அதில் 60% கடனடிப்படையினாலாகும். கடன் விற்பனைக்கான 50% பணம் பெறப்பட்டுள்ளது. மீதி கடன்பட்டோரில் 10% அறவிடமுடியாகக் கடனாகப் பதிவழிக்கப்பட்டது.

31/12/2022 இல் கடன்பட்டோர் மீதியையும், இலாப நட்டக் கூற்றில் உள்ளடக்கப்படும் அறவிடமுடியாக் கடன் தொகையும் முறையே கொண்ட விடையை தெரிவு செய்க.
1. ரூ 60 000 மற்றும் ரூ. 6000 2. ரூ 54000 மற்றும் ரூ 6000
3. ரூ. 120 000 மற்றும் ரூ 12000 4. ரூ 200 000 மற்றும் ரூ 6000

- **பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி வினா இல 35 முதல் வினா இல 40 வரை விடையளிக்க.**

சுரங்க வணிகத்தின் 31/12/2022 இல் உள்ளவாறான பரீட்சை மீதியின் மீதிகள் சில பின்வருமாறு,

| | ரூபா |
|---|---|
| 01/01/2022 இல் இருப்பு | 50 000 |
| விற்பனை | 350 000 |
| கொள்வனவு | 250 000 |
| உட்சுமைக் கூலி | 4 000 |
| கடன்பட்டோர் | 45 000 |
| மின்சாரம் செலவுகள் | 20 000 |
| ஊழியர் சம்பளம் | 26 000 |
| நிதிச் செலவுகள் | 5 000 |
| பெற்றக் கழிவு | 3 000 |
| கொடுத்தக் கழிவு | 12 000 |
| வாடகை வருமானம் | 7 000 |
| பற்றுக்கள் | 6 000 |
| 01/01/2022 இல் மூலதனம் | 400 000 |



kalvi.lk

மேலதிக தகவல்கள்

- 31/12/2022 இல் இருப்பு ரூ 40 000
- 31/12/2022 இல் செலுத்த வேண்டிய மின் கட்டணம் ரூ 2000
- கடன்பட்டோரில் ரூ 4000 அறவிட முடியாக் கடனாகப் பதிவழிக்கப்பட வேண்டும்.

35) 31/12/2022 இல் முடிவடைந்த ஆண்டிற்கான விற்பனைக்கிரயம்,
1. ரூ 86000 2. ரூ 260 000 3. ரூ 264 0000 4. ரூ 304 000

36) 31/12/2022 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மொத்த இலாபம்,
1. ரூ 86000 2. ரூ 90 000 3. ரூ 100 000 4. ரூ 48 000

37) 31/12/2022 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலுத்திய மின் கட்டணத் தொகை,
1. ரூ 2000 2. ரூ 18000 3. ரூ 20 000 4. ரூ 22 000

38) சுரங்க வணிகத்தின் நிதிநிலைமைக் கூற்றில் உள்ளடக்க வேண்டிய கடன்பட்டோர் தொகை
1. ரூ. 4000 2. ரூ 41000 3. ரூ 45000 4. ரூ 48000

39) 31/12/2022 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தேறிய இலாபம்,
1. ரூ 27000 2. ரூ 31000 3. ரூ 37000 4. ரூ 41000

40) சுரங்க வணிகத்தின் 31/12/2022 இல் உரிமையாண்மையின் பெறுமதி,
1. ரூ 421 000 2. ரூ 425 000 3. ரூ. 429 000 4. ரூ 433 000



kalvi.lk

| | ரோயல் கல்லூரி –கொழும்பு 07<br>Royal College – Colombo 07 | |
|---|---|---|
| | மூன்றாந் தவணைப் பரீட்சை – 2022 (2023)<br>3rd Term Examination – 2022 (2023) | 60 T II |
| | வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் II — தரம் 11<br>Business & Accounting Studies II — Grade 11 | நேரம் 2 மணித்தியாலம்<br>Time 2 Hours |

## பகுதி II

குறிப்பு

- **ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**
- **முதலாம் வினா கட்டாயமானது. பகுதி 1 இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி 11 இலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து விடையளிக்குக.**

1) **பின்வரும் விடய ஆய்வைப் பயன்படுத்தி வினா 1 முதல் வினா 8 வரை விடையளிக்குக.**

கால்நடை உத்தியோகத்தரான குமாரி தூய்மையான பால் மற்றும் பால்சார் உற்பத்திகளை விற்பனை செய்கின்ற வணிகமொன்றை "டிகிரி பால் நிலையம்" எனும் பெயரில் ஆரம்பிக்க தீர்மானித்துள்ளார். இதனை பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் ஆரம்பிக்கவுள்ளார்.

தனது சேமிப்புப் பணமான ரூ 500 000 ஐ மூலதனமாக ஈடுபடுத்தியதுடன், பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் ரூ 100 000 இற்கு கடையொன்றை வாங்கியுள்ளார். அதே தினத்தில் தனக்கு சொந்தமான ரூ 50 000 பெறுமதியான குளிர்சாதனப் பெட்டி ஒன்றையும் ரூ 30 000 பெறுமதியான தளபாடங்களையும் வணிகத்தில் ஈடுபடுத்தியுள்ளார். ரூ 100 000 வங்கிக்கடனைப் பெற்றதுடன் அனுபவமுள்ள இரு பெண் ஊழியர்களையும் வேலைகமர்த்தியுள்ளார்.

இந் நாட்களில் நாட்டில் ஏற்பட்ட உணவுப் பிரச்சினைகள் மற்றும் தொடர்ச்சியாக அதிகரித்த பால்மாவின் விலை காரணமாக விடுதி மாணவர்களும் பல்கலைக்கழகத்தை அண்மித்து வசிப்போரும் பால் வாங்குவதற்காக தினமும் சந்தைக்கு வருகை தருகின்றனர். அருகிலுள்ள பகுதிகளிலுள்ள சிற்றளவு பால் உற்பத்தியாளர்களிடமிருந்து பால் கொள்வனவு செய்யப்படுவதுடன் பிரபல்யமான முகவர்களிடமிருந்து ஏனைய பால்சார் உற்பத்திகள் கொள்வனவு செய்யப்படுகின்றன.

**ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு**

| | ரூபா |
|---|---|
| காசுக்கு கொள்வனவு | 100 000 |
| கடனுக்கு கொள்வனவு | 80 000 |
| காசு விற்பனை | 250 000 |
| மின்சாரம் | 10 000 |
| சம்பளம் | 15 000 |
| கட்டிட திருத்த வேலை செலவு | 5 000 |
| கடன் கொடுநருக்கு கொடுப்பனவு | 50 000 |
| கருவிகள் கொள்வனவு | 30 000 |



kalvi.lk

**மேலதிக தகவல்கள்**

- 31/ 01/ 2022 இல் பாலுற்பத்திப் பொருட்களின் இருப்பு ரூ 20000
- 31/ 01/ 2022 இல் செலுத்த வேண்டிய தொலைபேசிக்கட்டணம் ரூ 1000
- குளிர்சாதனப் பெட்டி வருடாந்தம் 12% தேய்விடப்பட வேண்டும் .
- ஜனவரி மாதத்திற்கான வங்கிக்கடன் வட்டி செலுத்தப்பட வேண்டும்.

குமாரி ஜனவரி 31 இல் அதி நவீன தொழினுட்பத்துடனான (Freezer) ஆழ்குளிருட்டி ஒன்றைக் கொள்வனவு செய்ய தீர்மானித்ததுடன் அது தொடர்பாக இணையத்தில் தகவல்களை தேடி அறிந்தார். அடுத்த மாதம் முதல் வணிகத்தின் பெயரில் வங்கி நடைமுறைக் கணக்கொன்றை ஆரம்பித்து அதன் மூலம் கொடுக்கல் வாங்கல்கள் செய்யவும் தீர்மானித்தார்.

1. a.''டிகிரி பால்நிலையம்'' வணிகத்தினால் பூர்த்தி செய்யப்படும் தேவை யாது?
   b. மேலே குறிப்பிடப்பட்டுள்ள வணிகம் உள்ளடங்கும் வணிக அமைப்பைக் குறிப்பிடுக.

11.a.''டிகிரி பால்நிலையம்'' வணிகத்தின் பலம் மற்றும் வாய்ப்பு ஆகியவற்றைத் தருக.
   b. உற்பத்தித் தன்மை அடிப்படையில் ''டிகிரி பால்நிலையம்''எவ் வகை வணிகமாகும்?

111. பின்வரும் முகாமைத்துவ கருமங்களுக்கான உதாரணங்கள் ஒவ்வொன்றை மேலே விடய ஆய்விலிருந்து எழுதுக.
   a. திட்டமிடல் b. ஒழுங்கமைத்தல்

IV. a. மேலே தரப்பட்டுள்ள விடயங்களின்படி மொத்த வியாபாரத்திற்கான உதாரணமொன்றை எழுதுக.
   b. ''டிகிரி பால்நிலையம்'' வணிகம் நடைமுறைக்கணக்கு ஆரம்பிக்க வேண்டிய வங்கி எது?

V. a. 01/ 01 /2022 இல் உள்ளவாறான உரிமை மற்றும் பொறுப்புக்களின் பெறுமதியைத் தனித்தனியே குறிப்பிடுக.
   b. 01/ 01/ 2022 இல் உள்ளவாறான நடைமுறையல்லா சொத்துக்கள் இரண்டைப் பெறுமதியுடன் தருக.

VI. a. 31 /01 /2022 இல் செலுத்த வேண்டிய வங்கிக்கடன் வட்டியைக் கணிப்பிடுக.
   b. மேலே கணித்த வங்கிக்கடன் வட்டியை பதிவு செய்வதற்கான முதன்மை ஏட்டையும் மூல ஆவணத்தையும் தருக.

VII. 31 /01 /2022 இல் காசு மீதியைக் காண்க.

VIII. a. குளிர்சாதனப் பெட்டிக்கான பெறுமானத் தேய்வை பொது நாட்குறிப்பேட்டில் பதிவு செய்வதற்கான நாட்குறிப்புப் பதிவுகளைத் தருக.
   b. 31/ 01/ 2022 இல் குளிர்சாதனப் பெட்டியின் தேறிய மீதி யாது?

IX. 31/ 01/ 2022 இல் முடிவடைந்த மாதத்திற்கான தேறிய இலாபம் அல்லது தேறிய நட்டத்தைக் கணிக்குக.

X. a. ''டிகிரி பால் நிலையம்'' வணிகத்தின் 31/ 01/ 2022 இல் உள்ளவாறான உரிமையாண்மையை கணிக்குக.
   b. 31/ 01/ 2022 இல் உள்ளவாறான மொத்த சொத்துக்களின் பெறுமதி யாது?

( 2 × 10 = 20 புள்ளிகள் )



kalvi.lk

## பகுதி I - வணிகக் கல்வி

2) .

1. மனித விருப்பங்களின் பண்புகள் 02 தருக. ( 02 புள்ளிகள் )

11. பின்வருவன உண்மையானவையா? அல்லது பொய்யானவையா? எனக் குறிப்பிடுக.
    a. வணிகரொருவரால் மனிதத் தேவையை உருவாக்க முடியும்.
    b. வணிகமொன்றில் வாடிக்கையாளர்கள் புறச்சூழல் காரணியாகும்.
    C. கூட்டுறவுச் சங்கங்கள் இலாப நோக்கமற்ற பொதுத்துறை வணிகமாகும்.
    d. நாடொன்றில் பொருளாதார நடவடிக்கைகளை நிர்வகிப்பதில் பின்பற்றப்படும் நிதிக் கொள்கைகள் அரசியல் சூழலுக்குரியவை ஆகும். ( 02 புள்ளிகள் )

111. கசுன் தனது தந்தையின் வாழைத்தோட்டத்திலுள்ள வாழைத்தண்டுகளிலிருந்து நார்களைப் பெற்று. அலங்காரக் கைப்பைகளை உற்பத்தி செய்கிறார். ஒரு பணிப்பெண்ணையும் வேலைக்கமர்த்தியுள்ளார். மேலும் இவ் உற்பத்திக்காக பசைகள், பொத்தான்கள் மற்றும் சாயம் போன்றவற்றையும் பயன்படுத்துகின்றார் இவரது உற்பத்திகள் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடையே அதிகம் பிரபல்யமாகி இருக்கிறது.

(a) மேலே விடயங்களிலிருந்து இரு உற்பத்திக் காரணிகளைத் தருக.
(b) மேலே வினா III (a) இல் நீர் குறிப்பிட்ட உற்பத்திக் காரணிகளுக்கான உதாரணம் ஒவ்வொன்றைத் தருக. ( 02 புள்ளிகள் )

IV. அண்மைக் காலமாக இலங்கை சந்தைகளில் பொருட்கள் மற்றும் சேவைகளின் பொது விலைமட்டம் தொடர்ச்சியாக அதிகரிக்கின்றது. இது பிரதானமாக டொலரின் பெறுமதி அதிகரித்தமையினாலாகும்

a. பொது விலை மட்டம் தொடர்ச்சியாக அதிகரித்தல் பொருளாதார சூழலில் எக்காரணியாகும்?
b. பொருளாதாரக் காரணியான நாணயமாற்று வீதம் என்பதை விளக்குக.

( 02 புள்ளிகள் )
(மொத்தம் 08 புள்ளிகள்)

3) I. காசோலையொன்றுடன் தொடர்புடைய இரு பிரிவினரைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

II. பின்வரும் கூற்றுக்கள் உண்மையானவையா அல்லது பொய்யானவையா எனக் குறிப்பிடுக.

a) உயர்நம்பிக்கை தத்துவம் ஆயுளுறுதியில் தாக்கம் செலுத்துகிறது.
b) தொடர்பாடல் செயன்முறையில், துலங்கல் என்பது செய்தியைப் பெறுபவர் செய்தி தொடர்பாக எவ்வாறு செயற்படுகிறார் என்பதாகும்.
c) தனது மகளின் திருமணத்திற்காக கேக் உற்பத்தி வணிகத்திலிருந்து 250 திருமண கேக்குளை கொள்வனவு செய்தல் மொத்த வியாபாரமாகும்.
d) கொமர்ஷல் வங்கியில், கடனடிப்படையில் கொடுக்கல் வாங்கல் செய்வதற்காக பெறப்படும் இலத்திரனியல் பணமே வரவட்டையாகும். ( 02 புள்ளிகள் )



kalvi.lk

III. பண்டராவளை பிரதேசத்தில் காய்கறிகளை வளர்க்கும் ஜெயஶ்ரீ, கொழும்பிலுள்ள மொத்த வியாபாரியான நவாஸிற்கு ஒரு தொகை காய்கறிகளை, விஷேட புகையிரத சேவை மூலம் அனுப்பினார்.

a) காய்கறிகளை அனுப்புவதற்காக ஜெயஶ்ரீ பயன்படுத்திய போக்குவரத்து முறையுடன் தொடர்புடைய போக்குவரத்தின் அடிப்படைகளை தருக.

b) புகையிரதம் மூலம் காய்கறிகளை அனுப்புவதன் பிரதிகூலமொன்றை தருக.

( 02 புள்ளிகள் )

IV. உபுல் , தனது 2 மில்லியன் பெறுமதியான காரை இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் அதன் பெறுமதிக்கே காப்புறுதி செய்தார். வீதியில் பயணிக்கும் போது ஏற்பட்ட விபத்தினால் ரூ 100 000 சேதம் ஏற்பட்டது.

a) மேலே சம்பவத்துடன் தொடர்புடைய முதலாம் கட்சியினர் மற்றும் இரண்டாம் கட்சியினரை தனித்தனியே தருக.

b) உபுல், நட்ட ஈடாக எவ்வளவு தொகையைப் பெற்றுக்கொள்ள முடியும்?

( 02 புள்ளிகள் )

( மொத்தம் 08 புள்ளிகள்)

4) I. சந்தைப்படுத்தல் கலவையில் இடத்திற்கான மாறிகள் 02 தருக. (02 புள்ளிகள்)

II. பின்வரும் கூற்றுக்கள் உண்மையானவையா? அல்லது பொய்யானவையா? எனக் குறிப்பிடுக.

a) திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் எவ்வாறு இடம்பெறுகின்றன என்பதை ஆராய்தல் தலைமைத்துவமாகும்.

b) சந்தைப்படுத்தல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கான மிகப் பிரதான சந்தைப்படுத்தல் கலவை விலையாகும்.

c) முதலீட்டின் இடர் மற்றும் அனுகூலங்களுக்கிடையில் நேரடித் தொடர்பு காணப்படுவதில்லை.

d) இலக்குச் சந்தை என்பது , ஒரு வணிகம் கவர்ச்சிகரமாகவும் அதே போல் இலாபமீட்டும் வகையிலும் திருப்திப்படுத்தக் கூடிய வாடிக்கையாளர் பிரிவாகும்.

( 02 புள்ளிகள்)

III) தினுஷா, லொட்டரி (Lottery) மூலம் பெற்றுக் கொண்ட ரூபா ஒரு மில்லியன் பணத்தைப் பயன்படுத்தி சாதாரணப் பங்குகளை கொள்வனவு செய்வதா அல்லது வங்கியில் நிலையான வைப்பிலிடுவதா என்பது தொடர்பாக தகவல்களை பெற்றுக் கொள்கிறார்.

a) மேலே குறிப்பிடப்பட்டவற்றுள் அதிக இடர் கொண்ட முதலீட்டு வழிமுறை எது?

b) மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு முதலீட்டு வழிமுறையின் அனுகூலத்தை தருக.

( 2 புள்ளிகள்)

IV) பாடசாலைப் பைகளை உற்பத்தி செய்யும் சக்தி, பாடசாலை மாணவர்களுக்கு விசேட கழிவை வழங்குகிறார். இது மாணவர்களுக்குப் பொருத்தமானவாறு வடிவமைக்கப்பட்டு பொருத்தமான அளவுகளில் தைக்கப்பட்டுள்ளது. பாடசாலை விடுமுறைக் காலங்களில் ஒவ்வொரு பைக்கும் அழகிய தொப்பி இலவசமாக வழங்கப்படுகிறது.

a) மேலே விடயங்களிலிருந்து சந்தைப்படுத்தல் கலவை மாறிகள் 02 தருக.

b) மேலே வினா III (a) இல் நீர் குறிப்பிட்ட ஒவ்வொரு மாறிகளுக்கான உதாரணம் தருக.

( 2 புள்ளிகள்)

(மொத்தம் 08 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி II கணக்கீடு

5) I. சொத்தொன்றின் பண்புகள் இரண்டு தருக. ( 2 புள்ளிகள்)

II. பின்வரும் கொடுக்கல் வாங்கல்களுக்கான இரட்டைப் பதிவை எழுதுக.

a) கடன்பட்டோரிடம் பெறப்பட்டு வங்கியில் வைப்பிலிடப்பட்ட ரூ 8000 பெறுமதியான காசோலை மறுக்கப்பட்டது.

b) வணிகப் பயன்பாட்டிற்காக ரூ 30 000 பெறுமதியான தளபாடங்கள் கடனடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டன. ( 2 புள்ளிகள்)

III. சேதனப் பசளை விற்பனை செய்யும் ஹசித வணிகத்தின் கொடுக்கல் வாங்கல்கள் சில பின்வருமாறு,

1. உரிமையாளர் ரூ 50 000 ஐ மேலதிக மூலதனமாக ஈடுபடுத்தினார்.

2. ரூ 80 000 பெறுமதியான சேதனப் பசளை இருப்பு கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது.

3. கடன் கொடுத்தோருக்கு கொடுப்பனவு ரூ 10 000

4. உரிமையாளர் தனது சொந்த தேவைக்காக ரூ 30 0000 பெறுமதியான பசளை இருப்பை எடுத்துள்ளார்.

5. ரூ 20 000 பெறுமதியான இருப்பு ரூ 30 000 இற்கு விற்பனை செய்யப்பட்டது.

a) மேலே தரப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்களை, பின்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி கணக்கீட்டு சமன்பாட்டில் பதிவு செய்க.

| கொடுக்கல்வாங்கல் | சொத்துக்கள் = உரிமை + பொறுப்புக்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | உபகரணங்கள் | இருப்பு | காசு | உரிமை | வங்கிக் கடன் | கடன்கொடுநர் |
| 1/12/2022இல் மீதி | 60 0000 | 100 000 | 40 000 | 150 000 | 30 000 | 20 0000 |
| 01 | | | + 50 000 | + 50 000 | | |
| 02 | | | | | | |
| 03 | | | | | | |
| 04 | | | | | | |
| 05 | | | | | | |

b) பின்வருவனவற்றின், 31/12/2022 இல் உள்ளவாறான மீதிகளை தருக.

1. உரிமை
2. நடைமுறை சொத்துக்கள்
3. நடைமுறை பொறுப்புக்கள்
4. நடைமுறை அல்லாத பொறுப்புக்கள்

( 04 புள்ளிகள்)

IV. சாலியா வணிகத்தின் சில்லறைக் காசுக் கொடுப்பனவுகள் பின்வருமாறு,

1. சில்லறைக் காசு வசக்கட்டு ரூ. 5000.
2. மொத்த சில்லறைக் காசுக் கொடுப்பனவுகள் ரூ 4200
3. 01.12.2022 மற்றும் 01.01.2023 இல் சில்லறைக் காசு வசக்கட்டு மீள் நிரப்பப்பட்டது.



kalvi.lk

டிசம்பர் மாதத்திற்கான சில்லறைக் காசுக் கொடுப்பனவுகள் பின்வருமாறு,

| திகதி | விபரம் | தொகை (ரூ) |
|---|---|---|
| 05/12/2022 | எழுதுகருவிகள் கொள்வனவு | 800 |
| 08/12/2022 | போக்குவரத்து செலவுகள் | 300 |
| 10/12/2022 | தபாற் செலவு | 400 |
| 18/12/2022 | பொழுதுபோக்கு செலவுகள் | 700 |
| 20/12/2022 | முத்திரைகள் | 650 |
| 23/12/2022 | அசோகாவிற்கு சம்பளம் முற்பணம் | 1200 |
| 25 /12/2022 | பேருந்துக் கட்டணம் | 250 |
| 28/12/2022 | பேனை மற்றும் பென்சில்கள் | 100 |

வேண்டப்படுவது,

- பகுப்பாய்வு நிரல்களாக தபாற் செலவு, போக்குவரத்து, எழுதுகருவி , பொழுதுபோக்கு, மற்றும் பேரேடு ஆகிய நிரல்களைக் கொண்ட சில்லறைக் காசேட்டை தயாரிக்க.

( 4 புள்ளிகள்)

( மொத்தம் 12 புள்ளிகள்)

6) I. பொதுவாகப் பேரேட்டில் காணப்படும் கணக்கு வகைகள் இரண்டு தருக. ( 2 புள்ளிகள்)

II. இரும்புக் கதிரைகளை உற்பத்தி செய்யும் நிமல் வணிகத்தின் 2022 ஜூலை மாதத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சில பின்வருமாறு,

- இரும்பு பொருட்கள் ரூ 200,000
- வேல்டிங் செய்பவர் கூலி ரூ 80,000
- மாதாந்த மின் கட்டணம் ரூ 10,000
- ஏனைய நேர் செலவுகள் ரூ 20,000
- தொழிற்சாலை வாடகை ரூ 30,000

ஜூலை மாதத்தில் 100 இரும்புக் கதிரைகள் உற்பத்தி செய்யப்பட்டன. ஒரு இரும்புக் கதிரையின் விற்பனை விலை ரூ 4000.

வேண்டப்படுவது,

a) 2022 ஜூலை மாதத்திற்கான ஒரு கதிரைக்கான முதன்மைக் கிரயத்தை கணிக்க.

b) கதிரை விற்பனை மூலமான இலாபத்தைக் கணிக்க. ( 2 புள்ளிகள்)

III. அசோகா வணிகத்தின் பரீட்சை மீதியின் வரவு மற்றும் செலவு நிரல்களின் கூட்டுத்தொகை சமப்படவில்லை. வித்தியாச தொகை ரூ 15000 தொங்கற் கணக்கில் வரவு வைக்கப்பட்டது.

பின்னர், கண்டுபிடிக்கப்பட்ட தவறுகள் பின்வருமாறு,

1. மின்கட்டணக் கொடுப்பனவு ரூ 8000 காசேட்டில் மட்டும் பதிவு செய்யப்பட்டது.
2. விற்பனை நாளேட்டின் கூட்டுத்தொகை ரூ 55 000 விற்பனைக் கணக்கில் ரூ 50 000 எனப் பதிவு செய்யப்பட்டது.
3. காப்புறுதிக் கட்டணக் கொடுப்பனவு ரூ 9000 ஏடுகளில் இரு முறை பதியப்பட்டது.
4. சம்பளக் கணக்கு மீதி ரூ 12 000 பரீட்சை மீதிக்கு கொண்டு செல்லப்படவில்லை.

வேண்டப்படுவது,

a) மேலே வழுக்களை திருத்துவதற்கான நாட்குறிப்பு பதிவுகள்

b) தொங்கற் கணக்கு ( 4 புள்ளிகள்)



kalvi.lk

IV. ஜனக வணிகத்தின் 31/07/2022 இல் வங்கிக் கணக்கு மீதி ரூ 18 000 ஆகும். அன்றைய தினத்தில் வங்கிக் கூற்று மீதி வேறுபட்டுக் காணப்பட்டது, அவ் வேறுபாட்டுக்கான காரணங்கள் பின்வருமாறு

1. வைப்பு செய்யப்பட்ட ஆனால் வசூலிக்கப்படாத காசோலை ரூ 3000.
2. நிலையான கட்டளையில் காப்புறுதி தவணைக் கட்டணக் கொடுப்பனவு ரூ 6000.
3. வழங்கப்பட்ட ஆனால் இன்னும் சமர்பிக்கப்படாத காசோலை ரூ 4800.
4. கடன்பட்டோர் நேரடி வைப்பு ரூ 2000

வேண்டப்படுவது,

1. 31/07/2022 இல் சீராக்கிய வங்கிக் கணக்கு
2. 31/07/2022 இல் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று

( 4 புள்ளிகள்)

( மொத்தம் 12 புள்ளிகள்)

7) I. நிதி நிலைமைக் கூற்றில் இடம்பெறும் விடயங்கள் 02 தருக. ( 02 புள்ளிகள்)

II. சமகி விளையாட்டுக் கழகத்திலுள்ள அங்கத்தவர்கள் 100 பேர் ஆவர். மற்றும் மாதாந்த அங்கத்துவக் கட்டணம் ரூ 100 ஆகும். 2022ம் ஆண்டிற்கான பெறுவனவு கொடுப்பனவுக் கணக்கு பின்வருமாறு,

சமகி விளையாட்டுக் கழகத்தின்
31/07/2022 இல் முடிவுற்ற ஆண்டிற்கான
பெறுவனவு கொடுப்பனவுக் கணக்கு.

| | ரூபா | | ரூபா |
|---|---|---|---|
| 01/01/2022 இல் காசு மீதி | 10 000 | விளையாட்டு உபகரணக் கொள்வனவு | 50 000 |
| அங்கத்துவக் கட்டணம் | 110 000 | மைதான பராமரிப்பு செலவு | 30 000 |
| நன்கொடை | 20 000 | பயிற்றுவிப்பாளர் சம்பளம் | 40 000 |
| கொடி விற்பனை | 10 000 | மீதி/கீ/கொ/செ | 30 000 |
| | 150 000 | | 150 000 |
| மீ/கீ/கொ/வ | 30 000 | | |

மேலதிகத் தகவல்கள்

- பெற வேண்டிய கொடி விற்பனை வருமானம் ரூ 5000.
- 2022ம் ஆண்டிற்காக செலுத்த வேண்டிய பயிற்றுவிப்பாளர் சம்பளம் ரூ 5000.

வேண்டப்படுவது,

- சமகி விளையாட்டுக் கழகத்தின் 31/12/2022 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவுக் கணக்கை தயாரிக்க.

( 02 புள்ளிகள்)



kalvi.lk

III. நிலந்தி வணிகத்தின் 31/12/2022 இல் உள்ளவாறான பரீட்சை மீதி கீழே தரப்பட்டுள்ளது.

| விபரம் | (ரூ) வரவு | (ரூ) செலவு |
|---|---|---|
| மூலதனம் | | 200 000 |
| விற்பனை | | 400 000 |
| 01/01/2022 இல் இருப்பு | 20 000 | |
| கொள்வனவு | 280 000 | |
| கடன்பட்டோர் | 63 000 | |
| கடன்கொடுத்தோர் | | 40 000 |
| கொடுத்த கழிவு | 3500 | |
| பெற்ற கழிவு | | 3000 |
| மின்கட்டணம் | 6000 | |
| அறவிட முடியாக் கடன் | 2500 | |
| 12% வங்கிக் கடன் | | 100 000 |
| வங்கிக் கடன் வட்டி | 10 000 | |
| காசு மீதி | 45 000 | |
| தொலைபேசிக் கட்டணம் | 3000 | |
| கட்டிடம்(கிரயம்) | 450 000 | |
| கட்டிட தேய்வு ஏற்பாடு 01/01/2022 | | 140 000 |
| | 883000 | 883000 |

மேலதிக தகவல்கள்

a) 31/12/2022 இல் இருப்பு ரூ 3200

b) 31/12/2022 இல் செலுத்த வேண்டிய தொலைபேசிக் கட்டணம் ரூ 1000

.

c) கட்டிடங்களுக்கு வருடாந்தம் 12% நேர்கோட்டு முறையில் தேய்விடப்பட வேண்டும்.

வேண்டப்படுவது,

a) 31/12/2022 முடிவடைந்த ஆண்டிற்கான இலாபநட்டக் கூற்று

b) 31/12/2022 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று

( 8 புள்ளிகள்)

( மொத்தம் 12 புள்ளிகள்)



kalvi.lk

Education
கல்வி
අධ්‍යාපන



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி அධ්‍යාපන Kalvi.lk

Whatsapp 075 287 1457